REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 15உ வியாழன் (1—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 16உ வெள்ளி (2—12—55) [இதழ் 146

பல அடுக்கு மாளிகை பாதுகாப்பு உடையதல்லவாம்!

"இந்த நீர்வளிக் குண்டு 'யுக'த்தில், நான்கு அடுக்குகளுக்குமேல் அதிகமான மாடிகளைக்கொண்ட மாளிகைகளை எழுப்புவது பாதுகாப்பானதல்ல"

—என்று சோவியத் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் நிகிதா குருஷ்சேவ் குறிப்பிட்டிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

'புதிய லேவாதேவிக்காரர்கள் இந்த மண்ணுக்கு உரியவரல்லர்'

'கடன் கொடுத்து இலாபம் அடிப்பது ஒன்றே அவர்கள் குறி'

'லேவாதேவிக்காரர்களுக்கு பாங்கிகள் கடன் தருவதைத் தடுக்க வேண்டும்'

லேவாதேவி மசோதாவை வரவேற்று டாக்டர் இலட்சுமணசாமி

"புதிதாகத் தோன்றியிருக்கும் லேவாதேவிக்காரர்கள், இம்மண்ணில் தோன்றியவர்கள் அல்லர். லேவாதேவி செய்து இலாபந் தேடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அவர்கள் இங்கு இறக்குமதியாகி உள்ளவராவர்.

"ஏராளமாக லேவாதேவி நடைபெற்றுக்கொண்டிருப்பதின் விளைவாக, ஒழுக்க விதிகள் அனைத்திற்கும் எதிராக நடந்துகொள்ளும் லேவாதேவிக்காரர்களைத் தடுக்க வேண்டியது இன்றியமையாததாகிறது.

"குறைவான வட்டிக்கு பாங்கிகளிலிருந்து லேவாதேவிக்காரர்கள் கடன் பெற்று, அதைக் கூடுதலான வட்டிக்குக் கொடுத்து இலாபம் சம்பாதிக்கின்றனர். எனவே லேவாதேவிக்காரர்களுக்கு கடன் கொடுப்பதிலிருந்து பாங்கிகளைத் தடுக்க வேண்டும்.

"நான் 1947-ம் ஆண்டிலிருந்து, இத்தகு மசோதா ஒன்று தேவையாகிறது என வற்புறுத்தி வந்துள்ளேன்."

—இவ்வாறு லேவாதேவிக்காரர்கள் மசோதாவை வரவேற்று, சென்னை மேல் சபையில் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"சர்க்கார் ஊழியர்கள்தான் கடன் வாங்குவோரில் பெருவாரியாக இருக்கின்றனர். சர்க்கார் ஊழியர்களின் 'பிராவிடண்ட்' நிதியிலிருந்து கடன் வழங்கும் முறை ஒன்றை சர்க்கார் பின்பற்றி வருகின்றனர். அப்படியிருக்கும் போது சர்க்கார் ஊழியர்களுக்கு சர்க்காரே ஏன் கடன் தந்து, பின்னர் அதை அவர்களின் சம்பளத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடாது? அப்படிச் செய்வது தான், கடன் கொடுப்போரின் கொடுமையிலிருந்து சர்க்கார் ஊழியர்களைக் காப்பாற்றுவதற்குள்ள சுலபமான வழியாகும். இதே வழியை இதர தொழில், வர்த்தக நிறுவனங்களும் பின்பற்றுமாறு தூண்டலாம்.

"தொழில் மிகுந்த வட்டங்களுக்குச் சென்று, கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவின் அவசியத்தை தொழிலாளர்கள் உணருமாறு செய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்குத் தரப்படும் தொகையின் ஒரு பகுதி, மத்தியதர வர்க்கத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் கடன் தருவதற்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

"டென்மார்க் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள், கடன் கொடும்போரை முழுவதுமாக ஒழித்துக் கட்டியிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"இந்த மசோதாவிலேயே வட்டி விகிதங்கள் திட்டவட்டமாகக் குறிக்கப்படவேண்டும். 15 ஆண்டுகளுக்கு முன்னால் ஐதராபாத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம் ஒன்றில், ஈட்டுக் கடன்களுக்கு 6 சதவிகிதம், ஈடில்லாத கடன்களுக்கு 9 சதவிகிதம் என்று வட்டி நிர்ணயிக்கப்பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட விழைகிறேன்."

ரஷ்யப் பிரதமர் தந்த பரிசு

யார் வைத்திருப்பது என்பதில் தகராறு

கோவை, நவ. 29—

ரஷ்யப் பிரதமர் புல்கானின் கோவையில் தந்த பரிசு ஒன்றை யார் வைத்திருப்பது என்பதில், கோவை நகர சபைக்கும்—'ஸ்கவுட்' தலைவருக்கும் 'தகராறு' கிளம்பியிருக்கிறது.

கோவையை விட்டுப் புறப்படும் போது விமான நிலயத்தில் பிரதமர் புல்கானின், புகைப் படம் எடுக்கும் கருவி ஒன்றை, விமான நிலயத்திலிருந்த 'ஸ்கவுட்' தலைவரிடம் அன்பளிப்பாகத் தந்தார்.

இந்தப் பரிசை தாங்கள் வைத்திருக்க வேண்டுமென நகரசபையினர் கோருகின்றனராம்; ஆனால், அது தங்களிடமே இருக்கவேண்டும் என, 'ஸ்கவுட்' தலைவர் கூறுகிறாராம். இந்தத் தகராறை, கோவை மாவட்ட நிர்வாக அதிகாரி தீர்த்து வைப்பார் என்று தெரிய வருகிறது.

சுயமரியாதைத் திருமணங்கள்

செல்லுபடியாக்க மசோதா

சென்னை, டிச. 1—

சுயமரியாதை முறைப்படி நடைபெற்ற திருமணங்களை செல்லுபடியாக்குவது என்ற நோக்கம் கொண்ட 'சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடி மசோதா' ஒன்றினை சென்னை சர்க்கார், சர்க்கார் வெளியீட்டில் பிரசுரித்திருக்கின்றனர்.

இம்மசோதாவை, சென்னை சட்டசபைக்கூட்டத்தில், திராவிட சட்டசபைக் கட்சியைச் சேர்ந்த தோழர் வி. ரங்கசாமி கொண்டுவர இருக்கிறார்.

'வடக்கும்-தெற்கும் ஒன்றுமா?'

அண்ணாதுரை அறைகூவல்

'கடிதம் எழுதினரே பண்டித நேரு'

'கல்லும் — காவியமும் சான்று பகருமே'

திராவிடர் தனிப் பெருமை: புதுவையில் விளக்கம்

"'இந்தியாவில் வடக்கு-தெற்கு என்ற பேதம் கூடாது; காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை இந்தியா ஒன்றுதான்; வடநாடு-தென்னாடு என்று பிரித்துப் பேசுவது பேதமை' என்று சில பெரிய மனிதர்களும், பெரிய இடத்தில் அமர்ந்திருப்பதினாலேயே பெரிய மனிதர்களானவர்களும் இப்போது அடிக்கடி பேசுகிறார்கள்.

"ஆனால் நாம், வடநாட்டவருக்கும்—தென்னாட்டவருக்கும் உள்ள தெளிவான வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டி, வடநாட்டவரை அன்னியர்கள் என்கிறோம்; அந்த அன்னியரின் ஆதிக்கத்தினின்றும் திராவிடர்கள் விடுதலை பெற வேண்டும் என்கிறோம்.

"வடநாட்டவர்கள் 'நம்மவர்' என்பதற்கு இலக்கணம் என்ன?

"வெள்ளைக்காரர்களை அன்னியர்கள் என்று ஏன் கூறினோம்?

"நம்முடைய வாழ்க்கை முறையிலிருந்து—நம்முடைய பண்பிலிருந்து அவர்கள் வேறுபட்டவர்களாயிருந்ததினால் தானே, அன்னியர்கள் என்று அவர்களை அடித்துத் துரத்தினோம்?

"அதே போன்றுதானே வடநாட்டவர், நம்மிலிருந்து வேறுபட்டவர்களாக விளங்குகின்றனர்?

"வடவரும்—தென்னாட்டவரும் நெஞ்சத்தால், அந்த நெஞ்சிலே நடமாடும் நினைப்புகளால், நடை-உடை-நொடி-பாவனைகளால் வேறுபட்டவர்களாயிருக்கின்றனர் என்பதற்கு எத்தனையோ ஆதாரங்களை நாம் காட்டியிருக்கிறோம்.

"ஆறுகளைக் கண்டால் நாம் அவற்றில் நீந்தி விளையாடுவோம்; வடவர்கள் புண்ணியம் தேடி மூழ்கி எழுவார்கள்.

"காடுகளைக் கண்டால் நாம் வேட்டையாட வில்லை

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

பழிவாங்கும் படலம்!

பியூனஸ் அயர்ஸ், நவ. 30—

அர்ஜெண்டைனாவில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த பெரானின் பெரோனிஸ்டா என்ற கட்சியை, அர்ஜெண்டைனா சர்க்கார் கலைத்து விடும்படி உத்திரவு பிறப்பித்து விட்டனர்.

இந்தக் கட்சி, ஆயுதப்படையினரில் ஒரு பகுதியினரையும், பெரும்பான்மையானத் தொழிலாளர்களையும் கொண்ட ஒன்றாகும்.

கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை

சென்னையில் நிறுவுமாறு சர்க்கார் வற்புறுத்தியிருக்கின்றனராம்!

அமைச்சர் பக்தவத்சலம் தகவல்

சென்னை, நவ. 29—

கனரக மின்சார இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் துவங்குமாறு சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்திவருவதாக, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

தொழிற்சாலையை நிறுவுவது, இந்திய சர்க்கார் ஆலோசனை கேட்டுள்ள நிபுணர் குழுவினர் சிபாரிசைப் பொறுத்தாகும் என்றும், துறையூர் ரங்கசாமி (ரெட்டியார்) கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

'தென்னிந்திய வர்த்தகச் சபையினர், இரண்டாம் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு என்று கூறி, சில புதிய தொழில்களைத் துவக்குவதற்கான திட்டங்களைத் தாக்கல் செய்தனர்; அவைகளைப் பரிசீலித்த பின்னர் சென்னை சர்க்கார் அவற்றில் சில திட்டங்களை சென்னையின் சுவல் திட்டத்தில் சேர்த்துக்கொண்டிருக்கின்றனர்,' என்றும் மந்திரி வேறொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர், 'சர்க்கரைத் தொழிற்சாலைகளைத் துவக்குவதை தனிப்பட்ட முதலாளிகளிடமே விட்டுவிட சர்க்கார் இப்போது தீர்மானித்திருக்கிறது' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கடவுளிடை தீண்டாமை!

அமைச்சர் 'இல்லை' என மறுக்கிறார்!

சென்னை, நவ. 29—

"தஞ்சாவூர் மாவட்டம் திருக்காரவயலில் உள்ள கைலாசநாயகி அம்பாள் கோயிலிலும், மற்றும் இதர கோயில்களிலும் ஜூன் முதல் தேதியன்று பிரம்மோத்சவம் நடைபெறும் போது, 'சண்டாளப் பிராயச்சித்தாபிஷேகம்' நடைபெறுமா? அந்த 'அபிஷேகம்,' 'ஆதிதிராவிடர்'கள் கோயிலிலும், தெருக்களிலும் நுழைந்து விட்டதினால் ஏற்பட்ட 'பாபத்'தைக் கழுவுவதற்காக நடைபெறும் ஒன்றா? அப்படியானால் இதனைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கிறது?"

என்று கேட்டபோது, சட்டசபையில் மந்திரி பரமேசுவரன் குறிப்பிட்டதாவது:

"அந்த அபிஷேகம் ஆண்டுதோறும் நடைபெறுகிறது; ஆதிதிராவிடர்கள் நுழைந்ததினால் ஏற்பட்ட 'பாப'த்தைக் கழுவுவதற்காக அல்ல; சாதாரணமாக, திருவிழா முடிந்ததும் 'தோஷங்'களுக்குப் பரிகாரமாக பிராயச்சித்தாபிஷேகம் நடைபெறுகிறது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வேறொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் 'சண்டாளர்' என்ற சொல்லை நீக்கிவிடுமாறு சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாயும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தீண்டாமை பற்றி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், 'கடவுள்களிடை தீண்டாமை இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பின்தள்ளப்பட்ட வகுப்பினர்

'குமாரக்ஷத்திரியர்' என்றழைக்கப்படும் ஒரு வகுப்பினரை, பின்தள்ளப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக்கொள்வதென்று சர்க்கார் உத்தேசித்துள்ளனர் என்று சட்ட சபைக் கூட்டத்தில் அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—12—'55 வியாழன்

பணிக்கரின் போதனை

இந்தியப் பேரரசின் அன்பிற்கும் பேராதரவிற்கும் பாத்திரமான சர்தார் பணிக்கர் அவர்கள், சென்னை கலைக் கல்லூரியில் பல்கலைக் கழக ஆசிரியர்களிடை பேசியுள்ளார். அவர் தம் பேச்சில் கல்வி சிரமைப்பில் தொடங்கி, கல்லூரி போதனு மொழி வரை பலப்பல கூறியுள்ளார்.

உயர்நிலைக் கல்வி பெற மாணவர்கள் பெரும் அளவில் ஆர்வம் காட்டுவதையும், அதன் விளைவாக மாணவர்களிடை பரவலாக நிலை பெற்றுள்ள ஒழுங்கீனத்தையும், கல்லூரி ஆசிரியர்கள்பால் பொதுவாகக் காணப்பெறும் தரக் குறைவையும் குறித்து பணிக்கர் குறிப்பிட்டுள்ளார்.

இருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டுவதில் அவருக்குள்ள அறிவாற்றல் ஒவ்வொருவராலும் அறியப்படும் அளவில் இருப்பதே போன்று, அவை களைக் களைவதற்கு அவர் குறிப்பிடும் பரிகாரங்களிலிருந்து அவருடைய அறிவாற்றல் பிறரால் அறிந்து கொள்ளப்படுவதாக இல்லை.

கல்லூரி போதனுஅமைப்பை மாற்றி அமைத்துவிடுவதிலும், அச்செயலை மேற்கொள்ளுவதற்குமுன் உயர்தரக் கல்வியை மேலும் ஓராண்டுக்கு நீடித்து விடுவதிலும், உயர்தரக் கல்வியின் முடியும் கட்டத்தில் தேறிய மாணவர்களுக்கு—கல்லூரிப் பட்டங்கள் போன்று—ஏதாவது பட்டங்களைக் கொடுப்பதிலும், மாணவர்களின் கல்லூரிக் கல்வி ஆர்வத்தைக் கட்டுப்படுத்திவிடக்கூடும் என பணிக்கர் கருதுகிருர். அது போன்றே கல்லூரி ஆசிரியர்களின் தரக் குறைவுக்கும், அவர்களுக்குத் தரப்படும் ஊதியமும் வாழ்க்கைத் தரமும் ஒரு பக்கத்திலும், மற்றொரு பக்கத்தில் பேராசிரியர்களும ஆசிரியர்களும் வைக்கப்பட்டுள்ள இழிநிலைபுந்தான் காரணமாகும் என பணிக்கர் அறிவிக்கிருர்.

மாணவர்களின் கல்லூரிக் கல்வி ஆர்வப் பெருக்கத்திற்கும், பேராசிரியர்களின் பொதுவான தரக்குறைவுக்கும் பணிக்கர் கூறும் காரணங்கள் பொருந்தக்கூடியனவாக இருந்தாலும் இல்லாமற்போனுலும், அந்தக் காரணங்களைக் களைந்தெறிந்து விடுவதினுலேயே நிலைமை சீர்ப்பட்டுவிடும் என நம்புவது முடியாது. சீரழிவைக் கொடுத்துள்ள நோய், பொதுவாகச் சமூகத்தின் ஆணிவேரையும், சல்லி வேர்களையும் பற்றி அரித்துக் கொண்டு இருக்கிறது என்பதே மிகமிகப் பொருத்தமுடையதாகும். சமூகத்தின் வாழ்க்கைக் கண்ணேட்டத்தையே தீவிரமாக மாற்றி அமைத்தாலன்றி, அதற்கான முயற்சியை தனித்த முறையில் பணிக்கர் போன்றவர்களும், அரசாங்கச் சார்பிலும் உடனடியாக மேற்கொண்டாலன்றி, காலஞ் சென்றுவரும் வெற்றி காணுவது என்பது முடியவே முடியாது.

அரசியல் துறையில் தோன்றிய விடுதலை வேட்கை அல்லது விழிப்புணர்ச்சி, அத்துறை அளவில் நின்றுவிடும் என எவரும் எதிர்பார்க்கக் கூடாது. விடுதலைவேட்கை, துறைகள் அனைத்திலும் காணப்பெறும் கொடுமைகள் — கேடுகள்— உயர்வுதாழ்வு தன்மைகள் முழுதும் களைந்தெறியப்பட்டாலன்றி, தணிந்துவிடாது. அக் கொந்தளிப்பு அரசியல் துறை உள்ளிட்ட ஒவ்வொரு துறையிலும் பிரதிபலித்துக்கொண்டு தான் இருக்கும்.

சமூகத்தின் கல்லூரிக் கல்வி பெரும் ஆர்வம், உயர்தரக் கல்விக் கட்டத்திலேயே சிறந்த பட்டம் ஒன்றை, சர்தார் பணிக்கர் கருத்துப்படி தந்து விடுவதினுலேயே தணிந்து விடாது. அதற்கு மாருக கல்வி ஆர்வத்தை முன்னிலும் பன்மடங்கு வேகமாக வளர்ப்பதற்கே துணை நிற்பதில் வந்து முடியும். கல்வித் துறையில் இருந்த கட்டுப்பாட்டை இந்திய வரலாறு கொண்டு ஒரு முறை நோக்கினுல்தான், சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள கல்வி ஆர்வத்தின் மூலகாரணத்தை ஒருவாறு உணர்ந்து கொள்வது சாத்தியமாகும்.

அடுத்தபடியாக, மாகாண மொழிகள் பற்றியும், கல்லூரி போதனு மொழி பற்றியும் பணிக்கர் குறிப்பிட்டுள்ளார். கல்லூரி போதனு மொழி பற்றி பணிக்கர் கூறியுள்ளதில், அறிந்தோ அறியாமலோ ஒரு பேருண்மையை வெளியாக்கியுள்ளார்.

அதாவது, இந்தியத் துணைக் கண்டம் முழுதும் உள்ள பல்கலைக் கழகங்களில் போதனு மொழியாக இந்தி மொழிதான் இருந்தாக வேண்டும் என பணிக்கர் அறிவித்துள்ளார். நாடு முழுதும் ஒரே மொழியில் உயர் கல்வி அளிப்பது என்ற கோட்பாட்டின்மீதுதான் எல்லாக் காலத்திலும் இந்தியாவின் ஒற்றுமை அமைக்கப்பட்டிருக்கிறது என்று, தனது 'கல்லூரிகளில் ஒரே போதனு மொழி' என்ற கூற்றுக்கு சான்றும் காட்டுகிருர், பணிக்கர்.

ஒரே மொழியின் 'அடிப்படையில் இந்தியாவின் ஒற்றுமை' என்ற தனது கண்டுபிடிப்பிற்கு, ஆங்கில மொழி தந்த ஒத்துழைப்பையும், அதற்கு முன் சமஸ்கிருத மொழி புரிந்த பணியையும் நடைமுறை காரணங்களாகக் காட்டுகிருர் பணிக்கர்.

இவ்வளவு கூறிய பணிக்கர் 'நமக்கு ஆதியில் சமஸ்கிருத மொழியும் ஒரு அன்னிய மொழியே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது' என்ற உண்மையையும் உறுதியாகக் குறிப்பிட்டிருக்கிருர் பணிக்கரின் உரைப்படி பார்த்தால், சமஸ்கிருத மொழி திராவிடரின் ஆதிமொழி அல்ல என்பதும், பிற்காலத்தில் திட்டமிட்டு மெள்ள மெள்ள—பையப்பைய திராவிடர்மீது திணிக்கப்பட்ட மொழியேயாகும் என்பதும் நன்கு விளக்கமாகிறது.

இதன்படி திராவிடம் தனித்து வாழ்ந்தது என்பதும், அதன் கலாச்சாரமும், சமஸ்கிருத கலாச்சாரத்திலிருந்து

கோத்தலாவலை நிலை மாறுகிருர்

தமிழுக்கு சமநிலை என உறுதி தரமாட்டாராம்!

கொழும்பு, நவ. 28—

நிலைமாறிடும் அரசியல்வாதியாக கோத்தலாவலை இப்போது காட்சியளிக்கிருர்.

அவர் ஒரு ஜனநாயக பிரதம மந்திரியாம்; அதனுல், தனது கட்சி என்ன கூறுகிறதோ அதன்படி நடப்பாராம். அதனுல், தமிழுக்கும் சிங்களத்தைப் போன்ற சமநிலை தரப்படும் என்ற உறுதிமொழி வழங்க இயலாதாம்.

இந்தக் கருத்தினை கோத்தலாவலை, தபால், ஒலிபரப்பு இலாகா மந்திரியான எஸ். நடேசன் என்பவருக்களித்துள்ள பேட்டியின் போது தெரிவித்திருக்கிருர்.

இறந்துவிட்ட பிரதமர் ஸ்டீபன் சேனநாயகா, சிறுபான்மையினரின் நலன்கள்—குறிப்பாக அவர்களது மொழி, மதம், கலாச்சாரம் இவை பாதுகாக்கப்படும் என்று உறுதிமொழி கூறியநிலையிலேயேதான், ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்ததாயும், இப்போது சர்க்காரின் கொள்கை மாறுமானுல், தான் மந்திரி சபையிலிருந்தும், கட்சியின் துணைத் தலைவர் பதவியிலிருந்தும் விலகிக்கொள்வதாகவும் தோழர் நடேசன் பிரதமரிடத்தில் தெரிவித்திருக்கிருராம்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரே ஆட்சி மொழி தீர்மானத்தை நிறைவேற்றுவார்களேயானுல், கட்சி, அரசாங்கம் இவற்றிலிருந்து தான் வெளியேறிவிடுவதாகப் பகிரங்கமாக அவர் தெரிவித்திருக்கிருர்.

இவரைப் போலவே வேறு பல தமிழ் உறுப்பினர்களும் கட்சியிலிருந்தும், அரசாங்கப் பொறுப்பிலிருந்தும் வெளியேறிவிடுவதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

★

இந்தியா முழுவதிலும் மதுவிலக்கு

மேற்கு வங்க அரசாங்கம் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 28—

மதுவிலக்கு விசாரணைக் குழுவினர் தெரிவித்துள்ளபடி, இந்தியா முழுமையும் மதுவிலக்கு அமுல் செய்வதற்கு மேற்கு வங்க அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறதாம்.

விசாரணைக் குழுவின் அறிக்கையை அமுல் செய்யக்கூடாது எனவும், வேலையில்லாத் திண்டாட்டம், கல்வி, அகதி புனரமைப்பு முதலிய சிக்கல்களுக்கு முதலிடம் தரவேண்டும் — அவைதான் உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டியவை என்றும் மேற்கு வங்க அரசாங்கம் தெரிவித்திருப்பதாக ராஜ்யங்கள் சபையில் திட்ட இலாகா உதவி மந்திரி பி. என். மிஸ்ரா தெரிவித்திருக்கிருர்.

மதுவிலக்கு விசாரணைக் குழுவின் அறிக்கை குறித்து பஞ்சாப், அசாம், ஐதராபாத் ஆகிய மூன்று மாநிலங்களும் கருத்தறிவித்துள்ளன என்றும் அவர் தெரிவித்திருக்கிருர் ; ஆனுல், அந்த மாநிலங்கள் மதுவிலக்கு குறித்து என்ன கருத்தறிவித்தன என்று அவர் கூறவில்லை.

மொழிவாரி அடிப்படையில் இலங்கை மக்கள் தொகை

யாழ்ப்பாணம் மாவட்டம்—இலங்கைத் தமிழர் சுமார் 90 சதவிகிதம்.

முல்லைத்தீவு மாவட்டம்—இலங்கைத் தமிழர் 70 முதல் 90 சதவிகிதம் கண்டி சிங்களவர் 5 முதல் 10 சதவிகிதம்.

மன்னர் மாவட்டம்—இலங்கைத் தமிழர் 50 முதல் 70 சதவிகிதம்; தமிழ் பேசும் மூர்கள் 25 முதல் 50 சதவிகிதம்.

அனுராாதபுரம்—கண்டி சிங்களவர் 50 முதல் 70 சதவிகிதம்; தென் இலங்கை சிங்களவர் 5 முதல் 10 சதவிகிதம்.

திரிகோணமலை — இலங்கைத் தமிழர் 50 முதல் 70 சதவிகிதம்; தமிழ் பேசும் மூர்கள் 25 முதல் 50 சதவிகிதம்.

சிலா—தென் இலங்கைச் சிங்களவர் 50 முதல் 70 வரை.

குருணுக்கலை—கண்டி சிங்களவர் 50 முதல் 70 வரை.

மாத்தளை—இந்தியத் தமிழர் 25 முதல் 50 வரை ; கண்டி சிங்களவர் 50 முதல் 70 வரை; தென் இலங்கை சிங்களவர் 5 முதல் 10.

பட்டிச்கொல்லை — இலங்கைத் தமிழர் 50 முதல் 70; தமிழ்பேசும் மூர்கள் 25 முதல் 50.

பதுளை—இந்தியத் தமிழர் 25 முதல் 50; தென் இலங்கை சிங்களவர் 5 முதல் 10 ; கண்டி சிங்களவர் 50 முதல் 70.

கண்டி—மூர்கள் 5 முதல் 10 ; தென் இலங்கை சிங்களவர் 5 முதல் 10.

நுவரேலியா—இந்தியத் தமிழர் 50 முதல் 70 ; கண்டி சிங்களவர் 25 முதல் 50.

கேகாலி—இந்தியத் தமிழர் 10 முதல் 25; தென் இலங்கை சிங்களவர் 5 முதல் 10 ; கண்டி சிங்களவர் 50 முதல் 70.

கொழும்பு மாவட்டம்—தென் இலங்கை சிங்களவர் 50 முதல் 70.

களுத்துறை—இந்தியத் தமிழர் 10 முதல் 20 ; தென் இலங்கை சிங்களவர் 50 முதல் 70.

ரத்னபுர—இந்தியத் தமிழர் 10 முதல் 25; தென் இலங்கை சிங்களவர் 10 முதல் 25; கண்டி சிங்களவர் 50 முதல் 70.

காலி—தென் இலங்கை சிங்களவர் 90 சதவிகிதம்.

ஹம்பார் தோட்டை — தென் இலங்கை சிங்களவர் 90 சதவிகிதம்.

மட்டத்துறை—தென் இலங்கை சிங்களவர் 90 சதவிகிதம்.

168 - சூடானியருக்கு மரண தண்டனை

சென்ற ஆகஸ்டு மாதத்தில் தெற்கு சூடானில் நடைபெற்ற கலகங்களில் கலந்துகொண்டார்கள் என்பதற்காக, 30 சூடானியர்களுக்கு இப்போது மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையிலும் விதிக்கப்பட்ட 168 மரண தண்டனை தீர்ப்புகளுள் 84 தீர்ப்புக்களை சூடான் கவர்னர் அங்கீகரித்து விட்டார் என்றும் கூறப்படுகிறது.

'குறள் நெறி உலகம் - முழுமைக்குமான பண்பாடாகும்'

பேராசிரியர் இலக்குவனர் விளக்கம்

" இன்று தமிழகத்தின் மக்களிடையுள்ள தமிழ் வளர்ச்சி உணர்ச்சியை ஒன்றுசேர்த்து உருவாக்கும் உணர்ச்சி நிலையங்கள் இல்லை. மனிதனின் மனம் உருவாகி வளர்ந்து வருதலே பண்பாடாகும். மனிதன் தனித்து இயங்கினுல் பண்பாடு ஏற்படாது; கூடி வாழ்ந்தால்தான் ஏற்படும் ; மனிதப் பண்பின் உச்சநிலை கண்ணேட்டமாகிய இரக்க உணர்ச்சியாகும். தமிழ்நாட்டில் உண்டாகியுள்ள பண்பாடு—குறள் நெறி, தமிழ் நாட்டிற்கு மாத்திரமில்லை ; உலகம் பூராவுக்குமாகும். கிரீக், பிரேஞ்சு, ஆங்கில நாட்டு இலக்கிய நெறிகள் அந்த நாட்டவருக்கேதான் பொருந்துவனவாக உள்ளன.

—என்று, 17—11—55 அன்று திருச்சியில் நடைபெற்ற திருக்குறன் அன்பர்கள் கூட்டத்தில் பேசுகையில், பேராசிரியர் சி. இலக்குவனர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் கூறினர் :—

'குறன் கழகம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற அளவிற்கு குறன் கழகங்கள் பரவ வேண்டும். உலகுக்கு வள்ளுவனைத் தந்துள்ளோமே தவிர வள்ளுவர் நெறியை நாம் உலகுக்குத் தரவில்லை. சிறப்பாகத் தமிழ் மக்கள் பூராவும் வள்ளுவர் நெறி, பண்பினை அறியக்கூடிய அளவிற்காவது நாம் பணி புரிதல் வேண்டும். குறன் கழகத் தொண்டர்கள் இப்பணியைச் செய்தல் வேண்டும்.

" தமிழ் நாட்டில் பெரும்பாலானேர், வாழ்க்கையில் குறிக்கோளின்றியே வாழ்கின்றனர். 'ஏன் பிறந்தோம்? எதற்காக வாழ்கின்ரேம்? வாழ்க்கையின் இலட்சியம் என்ன?' என்றுகூட அறியாத மக்கள் அதிகம் உள்ளனர். 'சிறந்தது வைத்தல் இறந்ததின் பயனே' என்பதை உணர்ந்தாரில்லை.

" இந்திய மொழி வளர்ச்சி ஆராய்ச்சி நூல் எழுதிய ஒரு வங்காளி, 'இந்தியா பூராவும் பேசப்பட்ட திராவிட மொழி தமிழ் மொழியே' என்று கூறியுள்ளார்.

" அமெரிக்காவில் தமிழனை இழிவுபடுத்தியிருக்கும் சிலையை அகற்றி மக்களும் அரசினரும் ஆவன செய்யாதிருப்பது வருந்தத்தக்கதாகும்.

" தமிழன் தனது வாழ்வில் தினம் ஒரு மணி நேரமாவது தமிழ் நாடு, மொழி, இனம் இவைகளுக்கு ஒதுக்கிச் சிந்தித்துப் பாடுபடுதல் வேண்டும்."

முழுதும் வேறுபட்டு வளர்ந்து வந்தது என்பதும் பெறப்படுகின்றன. இமமகத்தான உண்மை சர்தார் பணிக்கர் போன்றவர் வாயிலிருந்து வருகிறது என்ருல், அதுகண்டு எவர்தான் பூரிப்படையாமல் இருக்க முடியும்; நாம் மகிழ்வுடன் அவரைப் பாராட்டவும் துணிகிருேம்.

'புதிய கருத்துக்களை ஏற்க வேண்டும்'

'அப்போதுதான் முன்னேற முடியும்'

கல்வித் துறைத் தலைவர் விளக்கம்

சாதிபேதமற்ற சமுதாயஅவசியம்:

"சாதி பேதமற்ற சமுதாயம் உருவாகுதல் வேண்டும் ; புதிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டாலொழிய உலகின் ஏனைய நாடுகளுடன், நாம் முன்னேற்றப் பாதையில் செல்லுதல் இயலாது ; குழந்தைகளை அச்சமற்ற உள்ள நிலையில் பயிற்றுவிக்க வேண்டும் ; காலத்தில் பணியாற்றும் பெற்றியை எல்லோரும் பெறுதல் வேண்டும்."

என்று, சென்னை கல்வித் துறை டைரக்டர் என். டி. சுந்தரவடிவேலு அவர்கள், 21—11—55 காலை, கும்பகோணத்தில், சாரணர்களின் அணிவகுப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

" குடிமைப் பயிற்சி அளிக்கப்பெறும் இதுபொழுது, சாரணர் இயக்கம் அவசியமா என சிலர் ஐயப்படுகின்றனர் ; ஆனுல், சாரணர் இயக்கம் மிக மிக இன்றியமையாததொன்றென்பது தான் என் கருத்து." என்றும் அவர் கூறியிருக்கிருர்.

தென் இந்திய இரயில்வே 'லோன் சொசைடி' தேர்தல்

விளக்கமும் - வேண்டுகோளும்-[2]

பொன்மலைத் தோழர்கள் கே. ஏ. சூசையப்பன், வி. இராமானுஜாச்சாரி, டி. சச்சிதானந்தம், திருஞானசம்பந்தம், எம். கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரன் ஆகியவர்களும், திருச்சித் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஜி. இராமச்சந்திரன், எம். முஸ்தாபா உசேன், சி. ஜோசப், ஆர். நாராயணசாமி ஆகியவர்களும் கீழ்க்காணும் வேண்டுகோளை விடுத்துள்ளனர் :—

ஜனநாயக உரிமையில்லாத பிரதிநிதித்துவ சபை

சூழ்நிலையை எவ்வளவுக்கெவ்வளவு தங்கள் சூழ்ச்சிக்கும், சுயநலத்துக்கும் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றியே சதாசர்வகாலமும் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்கு ஒரு புதிய யோசனை பிறந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 120 பிரதிநிதிகளும் டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்க உரிமையற்றவர்களென ஆக்கிவிட்டால் ஆதிக்கத்தை நிலைக்கச் செய்யலாம் என்ற அடிப்படையில் வேலை தொடங்கினர். 36,000 பங்குதாரர்களும் சேர்ந்துதான் 14 டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளுக்கும், டைரக்டர்களும் உள்ள தொடர்பு என்ன என்பதுபற்றியே இவர்கள் கவலைப்படவில்லை. தங்களால் தேர்ந்தெடுக்கப்படாத டைரக்டர்களைக் கட்டுப்படுத்தவோ கண்காணிக்கவோ அந்தப் பிரதிநிதிகளால் எப்படி முடியும்? பஞ்சாயத்து போர்டுகளில் உள்ள தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் இடையே அடிக்கடி ஏற்படுகிற அதே தகராறுதானே பிரதிநிதிகளுக்கும்—டைரக்டர்களுக்குமிடையே ஏற்படும்? பிரதிநிதிகளின் உரிமைகளையும், அதிகாரங்களையும் அகற்றவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? கஷ்டப்பட்டுக் கடன்வாங்கி, 'வக்கீல் நோட்டீசு'களுக்கும், 'வாரண்டு'களுக்குமிடையே ஊசலாடும் இரயில்வே தொழிலாளியின் காசைப் பாழாக்க இதைவிடக் கொடுமையான திட்டம் வேறென்னவாக இருக்க முடியும்?

36,000 பங்குதாரர்களுடைய தொடர்பும் யாருக்குக் கிடைக்கிறதோ, அவரால்தான் டைரக்டராக முடியும். அந்தத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை நடத்தித் தர 'லேபர் யூனியனு'ம், கம்யூனிஸ்டு கட்சியும் பாடுபடும்; இவர்களுடைய ஆதரவைப் பெறாத எவருக்கும் டைரக்டராக யோக்கியதையே இல்லாமலே போகும்; 'லேபர் யூனியன்' ஆட்களையே டைரக்டர்களாக்கி, 'போக போக்கியதானுதி' விநியோக உரிமைகளுடன் 'லோன் சொசைட்டி'யைத் தங்கள் ஆதிக்க புரியாக்கிக்கொள்ளலாம்; பிரதிநிதித்துவ சபையின் உரிமையை பறித்து பங்குதாரர்களை ஏமாற்றப் பயன்படும் என்பதைத் தவிர வேறு என்ன விளையும், இதனால்?

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது செய்ய முடியாத குழப்பத்தை டைரக்டர் தேர்தலில் பயன்படுத்திக்கொள்ளலாம் — என்ற அடிப்படைக் கருத்தை உள்ளடக்கியே இந்தத் திட்டத்தை உருவாக்கினர். எதிர்த்துக் கேட்பவர்களிடம், '120 பேர்களை எளிதில் விலைக்கு வாங்கிவிட முடியும்' என்ற 'முனிசிபாலிட்டி' வாதத்தைப் பயன்படுத்தினர். அவ்வளவு பெரிய சீமான், சொசைட்டி பங்குதாரராக எங்கே வரப்போகிறார் என்பதே நமக்கு விளங்கவில்லை.

ஒவ்வொரு பங்குதாரருக்கும் உள்ள அடிப்படை உரிமையை நொறுக்கித் தூள் தூளாக்கிவிட்டு, வாதப் பிரதிவாதங்களால் சதியை மறைக்கும் மட்டரகங்களைப் பற்றி நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது.

மறுபடியும் எதிர்ப்பு முன்னணி திரண்டது. திருச்சி, பொன்மலையிலுள்ள ஜனநாயகத்தில் பற்றுள்ள பங்குதாரர்கள் அனைவரும் கூடினர்.

பிரதிநிதித்துவ சபையும்—15 டைரக்டர்களும்

14—5—55 அன்று நடந்த விசேடப் பொதுச்சபைக் கூட்டத்தில் இந்த பிரதிநிதித்துவ சபைத் திருத்தம் கொண்டுவரப்பட்டது :—

"டைரக்டர்களை நீக்கவோ, மாற்றவோ உரிமையில்லாத பிரதிநிதித்துவ சபைக்காகப் பங்குதாரர்களின் பணத்தைப் பாழாக்குவது பைத்தியக்காரத்தனம்; தனிப்பட்ட எந்தப் பங்குதாரரும், டைரக்டராகும் உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்,"

என்ற அடிப்படையில் எதிர்ப்பு உருவாகி இருந்தது.

ஆனால் பொதுச்சபைத் தலைவர், எதிர்ப்பவர்கள் கொடுத்தத் திருத்தத்தை அனுமதிக்க மறுத்துவிட்டார். ஒரு விசேடப் பொதுச் சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படும் எந்தத் திருத்தத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது, அடியோடு நிராகரிக்க வேண்டுமே தவிர, திருத்தத்துக்குத் திருத்தம் கொண்டுவர விதிகள் அனுமதிக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டித் தடுத்துவிட்டனர்.

திருத்தத்தை ஆதரித்து இருவரும், எதிர்த்து இருவரும் பேசிய பிறகு, 'திருத்தம் ஓட்டுக்குவிடப்படவேண்டும்' என்று தலைவரால் முடிவு செய்யப்பட்டு, இருதரப்பாரும் ஒத்துக்கொண்டனர். எதிர்த்துப் பேசியவர்கள் பங்குதாரர்களைத் தம்வயப்படுத்திவிட்டனர் எனத் தெரிந்ததும், 'லேபர் யூனியன்' திட்டம் தோல்வியடையும் என உணர்ந்து, எல்லோரும் பேசி முடித்த பிறகு, ஒரு டைரக்டர் எழுந்து தான் பேசப்போவதாகத் தெரிவித்தார்; தலைவர் அனுமதிக்க மறுத்தும், விடாப்பிடியாக ஒலிபெருக்கி முன் நின்று பேசத் தொடங்கினார்.

திருத்தத்தை எதிர்த்தவர்கள் அவர் பேசுவதை அனுமதிக்க மறுத்துவிட்டனர். உடனே வழக்கமான கூச்சலும், கலவரமும் தொடங்கின. என்ன பேசப்படுகிறது என்பதைவிட, யார் பேசுகிறார்கள் என்பதைக் கவனித்தே எதையும் செய்வதற்காகப் பயிற்சியளித்து அனுப்பப்பட்ட அவர்கள் கட்சிக்காரர்கள், மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் நடைபெற முடியாமல் தடுத்தனர்; சமாளிக்க முடியாமல், தலைவர், கூட்டத்தை ஒத்திப் போட்டுவிட்டார்.

கூட்டத்தை முடித்துவிட்டுத் தலைவர் வெளியேறியதும், பங்குதாரர்களில் பெரும்பாலோர் கலைந்துவிட்டனர். பெரும்பாலோர் போனபிறகு மனந்துணிந்து பொதுச்சபைக் கூட்டத்தை உடனடியாக நடத்தத் தொடங்கினர்—'லேபர் யூனியன்' டைரக்டர்கள்; தீர்மானத்தை அவர்கள் சார்பில் ஆதரித்துப் பேசிய ஒருவரையே தலைவராக அந்தக் கூட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தனர். வாதம் புரிந்தவருக்கே தீர்ப்பு கூறும் உரிமை எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய கவலையே அவர்களுக்கு இல்லை. அந்தத் திருத்தத்தை அவர்கள் ஆட்களைக் கொண்டே நிறைவேற்றினர்.

நிறைவேற்றப்பட்ட திருத்தம் கூட்டுறவு இலாகாவால் நிராகரிக்கப்பட்டது. 28—10—55-ம் தேதியிட்டு கூட்டுறவு இலாகா டிப்டி ரிஜிஸ்திரார் திரு கேசவகினி கையெழுத்திட்ட ஆர் சி. 14461/55 எப்.—என்ற கடிதத்தில், திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்ற செய்தியை 'லோன் சொசைட்டி' செயலாளருக்குத் தெரிவித்தார்கள்.

ஆனால், 'லேபர் யூனியன்' சார்பில் 22—10—55-ம் தேதி வெளியிடப்பட்ட ஒரு நோட்டீசில் திருத்தத்தை ரிஜிஸ்திரார் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

எல்லாவற்றையும்விட சிறந்த அம்சம் என்னவென்றால், நம் சங்கம் நீண்ட நாட்களாகக் கோரிவந்துள்ள இரயில்வே பூராவிலும் உள்ள சர்வ பங்குதாரர்களுக்கும் டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை, அடியிற்கண்டவாறு ரிஜிஸ்திரார் ஏற்றுக்கொண்டுவிட்டார்.

ரீஜன்		டைரக்டர்கள்
1.	திருச்சி பொன்மலை	6
2.	திருச்சி ஜில்லா	2
3.	மதுரை	2
4.	சென்னை	2
5.	போத்தனூர்	3

அதாவது 300 பேருக்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சபையும், மேற்கண்டவாறு 15 டைரக்டர்களும் 'லயன்' முழுமையிலுமுள்ள எல்லா பங்குதாரர்களாலும் 'சொசைட்டி'யின் சரித்திரத்தில் முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 3 வருடங்களுக்குப் பதவி வகிப்பார்கள்.

இந்த நோட்டீசில் கையெழுத்திட்டிருப்பவர்கள் தோழர்கள் எம். கல்யாணசுந்தரம் எம். எல். ஏ., (தலைவர்), கே. அனந்த நம்பியார் எம். பி. (பொதுச்செயலாளர்) இருவரும்தான்.

பொய், பித்தலாட்டம் இவைகளுக்கு இருப்பிடமானவர்கள் — என்பதைத் தவிர, வேறென்ன இவர்களைப் பற்றிச் சொல்ல முடியும்?

பொய்க் கையெழுத்திட்ட பிரசுரங்கள்

கடுமையான சொற்களைப் பயன்படுத்திக் காரசாரமாக எழுதுவது எங்களுக்கும் என்னவோபோலத்தான் இருக்கிறது; ஆனால் மனங் கொஞ்சம் கூடக் கூசாமல், 'நிர்வாகத்தின் கையாட்கள்' என்று, எதிர்ப்பவர்களைப் பற்றிப் பொது மேடைகளில் பேசுவது கண்டு எங்களுக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. யாரையாவது சுட்டிக் காட்டி, 'நிர்வாகத்தின் கையாள்' என்று குற்றஞ் சாட்டினால், வழக்கு மன்றம் வரை போகத் தயாராக இருக்கிறோம். பொய்க் கையெழுத்துப் போட்டு நோட்டீசு போட்ட ஒரு தகராறில் சிக்கிக் கொண்டிருக்கும் இவர்கள், தொடர்ந்து தொல்லைகளை வரவழைத்துக்கொள்ள முன்வரவே மாட்டார்கள்.

பங்குதாரர்களின் ஜனநாயக உரிமை

திரும்பத் திரும்ப பொதுச் சபைக் கூட்டங்களுக்குப் போய் தகராறுகள் செய்வதைவிட, இறுதியாக இதற்கு ஒரு முடிவு கண்டு, 'ஜனநாயக ரீதியில் பிரதிநிதி சபை அமைக்கலாம்' என்ற அடிப்படையில் ஒன்றுபட்டனர்-திருச்சி, பொன்மலையிலுள்ள பெரும்பாலான பங்குதாரர்கள்; எல்லாப் பிரிவினரும் ஏற்றுக்கொள்ளும் விதம் ஏழு பிரதிநிதிகளைப் பொறுக்கியெடுத்தனர். அவர்களுடைய முதல் கடமை, 'வெற்றி பெற்றால் உடனடியாகப் பிரதிநிதி சபை அமைத்து, அதிலிருந்து டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்கும் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும்' என்ற உறுதி மொழிப் பத்திரத்தில் ஒவ்வொருவருடைய கையொப்பத்தையும் வாங்கியிருக்கின்றனர்.

'எம்ப்ளாயீஸ் யூனிய'னும்—'எம்ப்ளாயீஸ் அசோசியேஷ'னும், 'சதர்ன் இரயில்வேமென் யூனிய'னும்—எந்த யூனியனைச் சாராதவர்களும், தொழிலாளியும்—குமாஸ்தாவும், பங்குதாரர்கள் என்ற அளவில் ஒன்றுபட்டு தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள்தான் இவர்கள். 36,000 பங்குதாரர்களின் பிரதிநிதிகளையும் இடம்பெறச் செய்ய வேண்டிய பொறுப்பை நிறைவேற்றிக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்.

ஒரே யூனியன் சார்பிலே ஆட்களிருக்க வேண்டும் என்பது, 'கூட்டுறவுச் சங்கம்' என்ற சொல்லையே அவமதிப்பதாகும். மற்றவர்களுக்குத் தெரியாமல் அக்கிரமங்களைச் செய்து, அதை மூடி மறைக்கத்தான் உதவுமே தவிர, செய்யப்படும் தவறுகளை எல்லோராலும் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்காது.

'சொசைடி' நூல் நிலயத்துக்கு ரூ. 500 பெறுமானமுள்ள கம்யூனிஸ்டு கட்சிப் பிரச்சார ஏடுகளை, விற்றுக் காசாக்கினாலும் வெளிவராது. சொசைடி சம்பந்தமான அச்சு வேலைகளுக்கு 'டெண்டர்' விட்டு ஆர்டர் வரவழைக்காமல் தங்கள் அச்சகத்திலேயே அச்சிட்டுப் பணம் பெற்றாலும் கேட்க நாதியிருக்காது.

ஆதரவு, எதிர்ப்பு இரண்டையும் ஒரே இடத்தில் வைத்தால்தான் எவரும் தவறு செய்யப் பயப்படுவர். இதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. குறிப்பிட்ட சிலரிடம் அதிகாரத்தைக் குவிப்பது சர்வாதிகாரத்துக்கு அடிப்படை அமைப்பதைப் போலத்தான் ஆகும்; அதனால் உருவாகும் கொடுமைகள் ஏராளம்.

நிரந்தரமாக ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்கே அதிகாரமளிப்பது, எவ்வளவு மட்டமான சூதாட்டங்களை நடத்த இடங்கொடுக்கிறது என்பதை விளக்க ஒரு உதாரணம் காட்டுகிறோம் :—

1952—53-ம் ஆண்டில் டைரக்டர்களாக இருந்தவர்களில் ஒருவர், 'சொசைடி' காரியமாக 13,14-2-53 தேதிகளில் கரக்பூர் போனபோது, தன் சொந்த லீவையும், 'பாசை'யும் பயன்படுத்திக்கொண்டு அதற்கான பணத்தை 'சொசைட்டி'யிலிருந்து பெற்றுக்கொண்டார்; இது வெளியே தெரிந்ததும் பெற்றுக்கொண்ட பணத்தைத் திரும்பவும் கட்டிவிட்டார்.

அப்போது கரக்பூர் சென்ற 3 டைரக்டர்களும் இரயில்வேயில் தங்கள் சொந்த 3-ம் வகுப்பு பாசை வாங்கிக்கொண்டு, ரூ. 165—8—0 மட்டும் கொடுத்து அவைகளை 'இண்டர் வகுப்பு'க்கு மாற்றிக் கொண்டனர் ஆனால், இவர்கள், ரூ. 385—8—0 கொடுத்து 3-பேருக்கும் 'இண்டர் வகுப்பு' டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டதாகக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். இந்த வகையில் 3 டைரக்டர்களும் ஏமாற்றிப் பெற்ற பணம் ரூ. 220—0—0 ஆகிறது.

"சொசைட்டி உப-விதி(பை-லா) 22 (பி) - யின்படி, ஒரு சொசைட்டி பங்குதாரர் பொய்யான தகவல்களைக் கொண்டு சொசைடியை ஏமாற்றினால், பொதுச் சபைத் தீர்மானத்தால் அவரை வெளியேற்றிவிட வேண்டும்."

நேர்மையான வழியில் இவர்கள் நடப்பவர்களாக இருந்தால் அவரை நீக்க வழி செய்திருக்க வேண்டும். ஆனால், அவரை எதுவும் செய்யவில்லை; இவர்கள், 'தங்களைச் சேர்ந்தவரல்ல அவர்' என்று அறிக்கைவிட்டு, தப்பித்துக் கொண்டு விட்டார்கள்.

குறிப்பாக, இவர்கள் ஆதரவை எப்போதும் பெறும் இந்த டைரக்டர், 17—2—53 அன்று காலை 10 மணிக்கு திருச்சியில் நடந்த இரயில்வே அக்கவுண்ட்ஸ் பரீட்சை எழுதியிருந்தும், அன்றைக்கும் 'பிரயாணப் படி' வாங்கினார். இப்படிப்பட்டவர் பெற்ற ஆதாயம் தான் கவனிக்கத்தக்கது.

'கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகிற ஆள் அவர்' என்பதற்காக, இந்தச் சலுகை இத்தோடு நிற்கவில்லை. 1955—56-ம் ஆண்டுக்கு 'சென்ட்ரல் பாங்க் மெம்பராக' அவரையே 'லேபர் யூனியன்' ஆட்களால் முன்மொழிந்து, வழிமொழியப்பட்டு, வழக்கமான கூச்சலும் குழப்பத்தாலும் தேர்ந்தெடுத்து விட்டார்கள்.

விரட்டப்பட வேண்டிய ஒருவருக்குப் பதவி தேடித் தரும் அக்கிரமத்தை வேறெவரிடமும் காண முடியாது. சாகசச் செயல்களால் எல்லோரையும் ஏமாற்றும் இந்த சதிகாரக் கூட்டத்தை இனிமேலும் நம்புவோம் என்று நண்பர்களில் யாராவது சொன்னால், அவர்களுக்காக வருந்துகிறோம்.

இனிமேல் வரப்போகிறவர்களைச் சந்தேகிக்கும் நண்பர்கள் இப்போது இருப்பவர்களின் ஊழல்களை எப்படி ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை. எதையும் கவனிக்காமல் பாராட்டுவதைவிட, ஒவ்வொன்றையும் ஊன்றிப் பார்த்து முடிவு செய்வதுதான் நல்லது என நம்புகிறோம்.

எதிர்ப்பு உருவாக வழிகோலிய காரணங்களில் ஒரு சிலதான் மேலே இருப்பவை. இவைகளைப் பற்றிச் சிந்தித்து முடிவு செய்யும்படி ஒவ்வொரு பங்குதாரரையும் வேண்டுகிறோம்.

[தொடர்ந்து வெளிவரும்]

கைக்குத்தல் அரிசி...!

சென்னை, நவ. 29—

மருத்துவ மனைகளுக்குத் தேவையான கைக்குத்தல் அரிசியை, நெல்லைக் குத்தித் தயார் செய்து கொள்வதென்ற உத்தேசமொன்று சர்க்காருக்கு இருப்பதாகவும், இந்த யோசனை, கலப்படத்தைத் தடை செய்வதற்கு உதவுமென்று சர்க்கார் கருதுவதாயும் சட்டசபையில் அமைச்சர் ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

குறளும் - விவிலிய நூலும்

சுந்தரவடிவேலு படப்பிடிப்பு

கல்வியின் நோக்கம் குறித்து விளக்கம்

"சிந்தனை, பகுத்தறிவுக் காலமெனத் திகழும் இக்காலத்தில், திருவள்ளுவர் போற்றப் பெறுகிறார் எனில், அவர் எக்காலத்தும் போற்றத்தக்கவராவார்; 'பைபில்' என்னும் விவிலியத்திற்கு அடுத்து உலகில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்றுள்ள நூல் திருக்குறள்தான். அத்தகு பெருமை கொண்ட, வள்ளுவர் காட்டிச் சென்றுள்ள நல்ல வழியில் நாட்டு மக்கள் செல்ல வேண்டும்; மனிதருள் வேற்றுமை உணர்ச்சி இருத்தல் கூடாது; இயற்கையேயடியைந்த வாழ்வையே மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

"மாணவர்கள் தேர்வுகளில் தேறுவதற்காகப் படித்தலை விடுத்து, அறிவு வளர்ச்சிக்காகக் கல்வி பயிலுதல்வேண்டும். பரம்பரையாகப் படியாத மக்களின் குழந்தைகள் இதுபொழுது படிக்கத் தொடங்கியிருப்பதால் அவர்களிடையே படிப்பின் தரம் உயர சில காலம் பிடிக்கும் எனச் சிலர் கூறுவதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. புது வெள்ளாமையில் நல்ல அறுவடை ஏற்படுவது எப்படி இயற்கையோ, அதே போல,படியாத குடும்பத்தின் மாணவர்கள் மிக நன்றாகப் படித்து முன்னேறக்கூடும்; மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் கல்வி பயின்றால் வெற்றியுறுவது உறுதி."

என்று, சென்னை மாநில கல்வித் துறை டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள், கும்பகோணத்தில் அண்மையில் நடைபெற்ற நகராட்சி மன்ற உயர்நிலைப் பள்ளி வள்ளுவர் மன்றக் கூட்டத்தில், திருவள்ளுவர் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்,

அண்ணா அறைகூவல்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வளைப்போம்; அவர்கள், 'கானகமேவிய இராமனின் கால்கள் இந்தக் காட்டினில் பட்ட துண்டா?'--என்று ஆராய முற்படுவர்.

"நாம் நான்கு முழத் துணி கட்டுகிறோம்; அவர்கள் பதினெட்டு முழத் துணியை 'முண்டாசு' கட்டுகின்றனர்.

"நமது உணவு அரிசி; அவர்கள் உணவு கோதுமை.

"காமராசர் கோதுமை உணவு உண்டால், பண்டித நேரு அரிசி உணவு உண்டால், அது செய்தியாகிறது—பத்திரிகைகளுக்கு!

"நமது மொழி திராவிட மொழிகள்; அவர்கள் மொழி இந்தோ-ஆரிய மொழிகள்.

'நமது நாட்டில் கோபுரங்கள் உள்ளன—மதுரையில், சிதம்பரத்தில், திருப்பதியில், இன்னும் பற்பல இடத்தில்; அண்ணாந்து பார்த்தால் கழுத்து வலிக்கும்; கருத்து சிறக்கும்.

அவர்கள் நாட்டிலும் கோபுரங்கள் உண்டு—காசியில், பிரயாகையில், அமிர்தசரசில், இன்னும் பலப்பல இடங்களில்!

"நமது நாட்டு கோபுரங்கள் திராவிடச் சிற்பக் கலைத்திறன் வாய்ந்தவை; வடநாட்டுக் கோபுரங்கள் இந்தோ-பாரசிக சிற்பக் கலை வழி அமைந்தவை.

"நமது சங்கீதம்—தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் பாடப்படும் கீர்த்தனைகள்—'கர்நாடக சங்கீதம்' எனப்படும். இந்த நான்கு மொழியில் இசைக்கப்படும் எந்தக் கீர்த்தனையும் ராகம், தாளம், இசை அமைப்பு இவற்றில் ஒன்றுபட்டிருப்பவையாகும்.

"ஆனால், வடநாட்டவர் சங்கீதம் இந்துஸ்தானி சங்கீதம்; கர்நாடக சங்கீதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது—மாறுபட்டது.

"இத்தனை வேறுபாடுகளையும் நாம் சுட்டிக்காட்டி, 'திராவிடர் வேறு இனத்தவர்—வடநாட்டவர் வேறு இனத்தவர்' என்று கூறுகிறோம்.

"இந்த வேறுபாடுகள் உண்டு; நிலைத்து இன்றும் நீடித்திருப்பவை — என்பதற்கு ஆதாரங்களை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

"இந்தியாவின் பிரதமராக விளங்கும் பண்டித நேரு—இன்று தாம் பெற்றுள்ள புகழும், கீர்த்தியும் கிடைக்கும் என்று கனவுகூடக் காண இயலாதிருந்த காலத்தில்—சுதந்திரப் போராட்டத்தின்போது—தமது அருமை மகள் இந்திராவுக்கு கடிதங்கள் பல எழுதினார்—சிறைச்சாலையிலிருந்து; கடிதங்கள் என்றால், அவை, நாமெல்லாம் எழுதுவதைப் போன்ற கடிதங்கள் அல்ல; உலகத்தைப் பற்றியும், அதன் நடப்புகளைப் பற்றியும், உலகத்தில் வாழும் பல்வகை மக்கள் கூட்டம் பற்றியும் எழுதினார்.

"அந்தக் கடிதங்கள் ஒன்றில், 'இந்தியாவில், விந்தியத்திற்கு வடக்கே வாழும் நாம் எல்லாம் ஆரியர்கள்—விந்தியத்திற்குத் தெற்கே வாழுபவர்கள் எல்லாம் திராவிடர்கள்,' என்று திட்டமாக எழுதியிருக்கிறார்.

"வடக்கு வேறு—தெற்கு வேறு என்று பேசக்கூடாது—என்று கூறுபவர்களுக்கு, பண்டித நேருவின் அந்தக் கடிதத்தைச் சுட்டிக்காட்டுகிறோம்.

"இந்த இன வேறுபாடு இல்லை என்று பேசுபவர்கள், பண்டித நேருவுக்கே துரோகம் இழைப்பவர்களாகும்.

"சென்னையில் பல்கலைக் கழகம் இருக்கிறது; அந்தக் கழகத்தில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளையும் 'திராவிட மொழிகள்' என்றே இன்னமும் அழைக்கின்றனர்; இந்த நான்கு மொழி அல்லாத இதர மொழிகளை 'இந்தோ-ஆரிய மொழி'கள் என்று அழைக்கிறார்கள்.

"ஏன்? அருகில் இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 'திராவிட மொழி ஆராய்ச்சி அரங்கம்' ஒன்றை அண்மையில்தான் நமது நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் துவக்கி வைத்திருக்கிறார்.

"திராவிட மொழி ஆராய்ச்சி அரங்கைத் துவக்கிவிட்டு, 'திராவிடர்கள் தனி இனத்தவர் அல்லர்' என்று பேசுவது எப்படிப் பொருந்துமோ நமக்குத் தெரியவில்லை!

"இப்படி திராவிட இனத்தின் தனித் தன்மை கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது; காவியத்தில் இடம் பெற்றிருக்கிறது; வரலாற்றில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

"இத்தனை வேறுபாடுகளுக்கும் பிறகும், 'வடவருக்கும்—திராவிடருக்கும் ஒற்றுமை இருக்கிறது' என்று கூறினால், உலகத்தில் மனித உருவம் படைத்த அத்தனை பேருக்கும்தான் ஒற்றுமை இருக்கிறது—இரண்டு கண், இரண்டு காது, இரண்டு கால், இரண்டு கை, ஒரு மூக்கு, ஒரு வாய்—என்று, உலக மக்கள் அனைவரும்தான் பெற்றிருக்கிறார்கள்; அதனாலேயே, 'எல்லா மக்களும் ஒன்று' என்று கூறிவிட முடியுமா?

"ஒவ்வொரு இன மக்களும், உலகத்தில், தங்கள் தங்கள் பண்பாடுகளால், வாழ்வு முறைகளால், கலை கலாச்சாரத்தால் வேறுபட்டவர்களாயிருக்கவில்லையா?

"திராவிடரின் தனிப் பெருமையை எத்தனை பெரிய மனிதர்கள் மூடி மறைத்தாலும், அழித்துவிட முடியாது—இல்லை என்று கூறிவிட முடியாது. வடக்கு வேறுதான்—தெற்கு வேறுதான் என்ற உண்மையை ஒழித்துவிட முடியாது.

"இப்படி வடக்கு வேறு—தெற்கு வேறு என்று நான் குறிப்பிடும்போது, அவர்கள் கை நமது குரல்வளையிலும், நமது கை அவர்கள் பிடரியிலும் இருக்க வேண்டுமென்பதல்ல; நமது மடியில் அவர்கள் கை வைக்காமலிருக்க வேண்டும்; நாம் அவர்கள் பாதங்களைத் தொட்டுக் கும்பிடும் நிலை மாற வேண்டும்; அவ்வளவுதானே தவிர, வடநாட்டவரும்—தென்னாட்டவரும் அடித்துக்கொண்டு சாக வேண்டுமென்பதல்ல,"

—என்று, அண்ணாதுரை அவர்கள், புதுவை வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

(சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்திருக்கிறது)

தொடர்ந்து பேசுகையில் அண்ணா அவர்கள், நமது திராவிட நாடு கோரிக்கைக்கு வலுவூட்டுகிற வகையில், கடந்த எட்டாண்டுகால ஆட்சி நடைமுறையைச் சுட்டிக் காட்டினார்கள்; ஐந்தாண்டுத்திட்ட அநீதியினை புள்ளி விவரங்களுடன் விளக்கினார்கள்.

"இத்தனை நிலைகளையும் விளக்கிவிட்டு, 'திராவிட நாடு திராவிடருக்காகவேண்டும்' என்கிறோம்; 'வடநாட்டவர் ஆதிக்கப் பிடியிலிருந்து தென்னாடு விடுதலை பெற வேண்டும் என்கிறோம்.

"இது பற்றி இங்கு—தென்னாட்டில் உள்ள சிலர், 'திராவிட நாடா, தரமுடியாது' என்ற தோரணையில் பேசுகின்றனர். அவர்களுக்குச் சொல்கிறேன்—'திராவிட நாடு தர முடியாது' என்று கூறுவதற்கு, உங்களிடமல்ல நாங்கள் கோருவது—நீங்கள்வேண்டுமானால் திராவிடநாடுபெறுவதனால் விளையும் கேடுகளை எடுத்துக்காட்டுங்கள்; அதுதான் நியாயமானதாயிருக்க முடியும். அதைவிடுத்து, 'திராவிட நாடு தரமுடியாது' என்று சொல்வது தவறு; உங்களிடமல்ல, எங்கள் கோரிக்கைக்குப் பரிகாரம் இருப்பது; திராவிட நாடு கோரிக்கை பற்றிப் பேசத் தகுதிபடைத்தவர், பண்டித நேரு போன்றோரேயாகும்.

"அந்த வடநாட்டுத் தலைவர்கள் இன்று, 'திராவிட நாடு தர முடியாது' எனக் கொக்கரிக்கிறார்கள்

"ஜின்னாவுக்கு பாகிஸ்தான் தந்தான பிறகு, திராவிடருக்கு அவர்கள் நாட்டைத் தர மறுப்பதில் என்ன நியாயமிருக்க முடியும்? பாகிஸ்தான் பிரிவினைக்கு இவர்கள் சம்மதிக்காதிருந்தாலாவது, 'இவர்களிடம், விவேகமில்லாவிடினும் வீரமாவது இருக்கிறது,' என்று நாம் கொள்ள முடியும் ஆனால், பாகிஸ்தான் பிரிந்த பிறகு இப்போது, திராவிட நாடு பிரிவினையை எதிர்ப்பது விவேகமுமல்ல—வீரமுமல்ல!

"வேண்டுமானால், ஜின்னா கேட்ட 'மாதிரி'யில் நாம் திராவிட நாடு கேட்கவில்லை என்கிறார்களா? நான் வடநாட்டவருக்குச் சொல்ல விழைகிறேன்—அந்த நிலைக்கு எங்களைத் துரத்தாதீர்கள்—என்று!"

ஈ. வெ. கி. சம்பத்

வட நாட்டுச் சுற்றுப்பயணம்

அன்புள்ள தோழர்களே!

டில்லி நகரில் நடைபெறும் சர்வதேசத் தொழிற் கண்காட்சியைக் காணவும், வடநாட்டில் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன, தொழில் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டறியவும் எனது துணைவியாருடன் காரில் செல்லுகிறேன். மீண்டும் அங்கிருந்து திரும்புவதற்கு ஒரு மாத காலமாகலாம் என எண்ணுகிறேன்; எனவே, அதுவரை நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக்கொள்ளுமாறு பணித்துக் கடிதங்கள் எழுதாமல்இருக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களன்புள்ள
ஈ. வெ. கி. சம்பத்

கழகக் கூட்டம்

★

ஆனைமலை

திரு. வி. க. திடலில்
(மாரியம்மன்கோவில் மைதானம்
3—12—55 இரவு 7½ மணிக்கு
பேசுபவர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பொதுக்கூட்டம்

3—12—55 மாலை 6 மணிக்கு சென்னை-எண் 287, திருவொற்றியூர் பெரிய சாலையில், [புதுவண்ணை-கிராஸ் ரோட் சமீபம்] வள்ளுவர் இளைஞர் மன்றச் சார்பில், தோழர் டி.சண்முகம் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், கண்ணதாசன், சுரதா ஆகியோர் பேசுவர்.

'வாய்ஸ் ஆப் அமெரிக்கா'வில் இசையரசு தண்டபாணி தேசிகர்

சென்னை டிச. 1—

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் இசைக் கல்லூரித் தலைவர் தமிழ் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் விசேட இசை விருந்துகளை டிசம்பர் மாதம் 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வானொலியில், புதன்கிழமைதோறும் கேட்கலாம்.

'வாய்ஸ் ஆப் அமெரிக்கா'வுக் கென்றே, தனியே பல பாடல்களை இசையரசு அவர்கள் ஒலிப்பதிவு செய்து கொடுத்திருக்கிறாராம்.

இவற்றை டிசம்பர் மாதத்தில், ஒவ்வொரு புதன்கிழமையன்றும் இந்தியக் கடிகாரப்படி இரவு 7½ மணி—8 மணி இவற்றுக்கிடையே 25·26, 42·19 மீட்டர்களில் கேட்கலாமாம்.

புதன்கிழமைதோறும் இரவு 7½ முதல் 8 மணி வரையும், 9¾ மணி முதல் 10¾ மணி வரையும் 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' ஒலிபரப்பும் தமிழ் ஒலிபரப்பில், செய்திகள், நேயர் தபால், விஞ்ஞான விமரிசனம், தமிழ்த்திரை இசை முதலியவை உள்ளன.

வட ஆற்காடு மாவட்டத்தில் மு. கருணாநிதி

4—12—55 வேலூர்-காலை 10 மணி: நேஷனல் டாக்கீஸ்

10—12—55 மாலை 6 மணி: காங்கேயநல்லூர்;

இரவு 10 மணி: குடியேற்றம்—ராஜேந்திரன் நாடக மன்றத்தாரின், அண்ணாவின் 'சந்திரமோகன்'—நாடகத் தலைமை

11—12—55 மாலை 6 மணி: வாணியம்பாடி

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு

"4-12-55 காலை 11 மணிக்கு, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், கோலார் தங்கவயல் ராபர்ட்சன்பேட்டையில் நடைபெறும்.

"அன்று மாலை 4 மணிக்கு, கோலார், தங்கவயல் ஆகிய இரண்டு கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். பெங்களூர் மாவட்டப் பிரதிநிதிகளும், கிளைக் கழகச் செயலாளர்களும், கோலார், தங்கவயல் உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்றுக் கொண்டு கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, பெங்களூர் மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். வி. பதி அறிவிக்கிறார்.

பரமக்குடி தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

3—12—55 இரவு 10 மணிக்கு பரமக்குடி தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும் அது போது, இராமநாதபுரம் மாவட்ட சுற்றுப்பயணத்தின்போது பரமக்குடி நகருக்கு அண்ணாவை அழைத்தல், கழகக் கட்டிட வரவு-செலவு கணக்கு ஆகியவை பற்றி தீர்மானிக்கப்படும்.

மாயூரம் பொதுக்கூட்டம்

ஒத்திவைப்பு

3—12—55 சனியன்று மாயூரத்தில் தோழர் சி. பி. சிற்றரசு பேசுவதாக இருந்த பொதுக் கூட்டமும், அன்று காலை ஆரோக்கியநாதபுரத்தில் நடைபெறவிருந்த திரு. வி. க. படிப்பகக் கட்டிடத் திறப்பு விழாவும் தொடர்ந்தாற்போல் பெய்து கொண்டிருக்கும் மழையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

முகவரி மாற்றம்

'திராவிடன்' அலுவலகம், சோமு அச்சகம் 1—12—55 முதல் கீழ்க்கண்ட இடத்திற்கு மாற்றப்படுகிறது:—

'திராவிடன்',
16/99, அம்மன்கோயில் தெரு,
(வால்டாக்ஸ் ரோட் P. O.)
சென்னை—1

'பகுத்தறிவு'

ஒவ்வோர் ஆங்கில மாதம் முதல் நாளில் வெளிவந்துகொண்டிருக்கும் 'பகுத்தறிவு' இதழின் டிசம்பர் வெளியீடு, இம்மாதம் 10-ம் நாளில் வெளிவரும் என்பதை 'பகுத்தறி'வின் கையொப்பதாரர்கள், விற்பனையாளர்கள், வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. கண்ணன்,
அதிபர் & ஆசிரியர்

லூதியானாவிலும் கைகலப்பு

மகா பஞ்சாப் முன்னணியினரின் விரும்பத் தகாத போக்கு

லூதியானா, நவ. 28—

அகாலி தளத்தைச் சேர்ந்த சிலருடன் மகா பஞ்சாப் ஆதரவாளர்கள் சிலர் மோதிக்கொண்டதின் விளைவாக ஒருவருக்குக் காயம் ஏற்பட்டது என்று தெரிய வருகிறது.

குருநானக் பிறந்த நாளை ஒட்டி அகாலி தளத்தவர் ஏற்பாடு செய்திருந்த ஊர்வலம் சௌரா கடைத் தெருவை அடைந்தபோது இந்த மோதுதல் ஏற்பட்டிருக்கிறது.

மகா பஞ்சாப் அமைப்பை எதிர்த்தும், பஞ்சாப் மொழி வழி மாநிலம் கோரியும் அகாலியர் குரல் எழுப்பி வந்தனர். இதைப் பார்த்த மகா பஞ்சாப் ஆதரவாளர்கள் உடனே எதிர்க்குரல் கொடுத்து குழப்பம் உண்டாக்கியிருக்கின்றனர். போலீசார் அமைதியை நிலைநாட்டியிருக்கின்றனர்.

பல அடுக்கு மாளிகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சோவியத் நிபுணர்களின் கருத்து என்றும், இதனை பிரிட்டிஷ் நிபுணர்கள்கூட ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராயிடம் தெரிவித்திருக்கிறாராம்.

நகரில் மக்கள் நெருக்கடியைக் குறைக்க நகரை விரிவுபடுத்துவதையும், துணை நகரங்கள் ஏற்படுத்துவதையும் குருஷ்சேவ் ஆதரித்தாராம்.

கல்கத்தா நகரில் 50 இலட்சம் மக்களுக்குமேல் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

சொற் பயிற்சிக் கூட்டம்

2—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை - முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, மூத்தமிழ் மன்றத்தில், தோழர் டி கோவிந்தன் தலைமையில் நடைபெறும். 'உழவு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.